மினுவங்கொடை நகர சபை - 2024
---

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 பாதகமான அபிப்பிராயம்

மினுவங்கொடை நகர சபையின சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களில் மாற்றங்கள் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளுக்குரிய தகவல்கள் உள்ளடக்கிய நிதிக் கூற்றுக்களுக்குரிய பொழிப்புக்களுடன் கூடிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின்(அதிகாரம் 255) 181(1) ஆம் உப பிரிவினதும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தினதும் 10(1) உப பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக் கூற்றுக்களிலிருந்து 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மினுவங்கொடை நகர சபையின் சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப் பாய்ச்சல் உள்ளூராட்சி மன்ற நிறவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கவில்லை என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் பாதகமானதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது பாதகமான அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதுமானதும் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந் நிதிக் கூற்றுக்களை உள்ளூராட்சி மன்ற நிறவனங்களுக்கான பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் நகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வு விடயப் பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டு மொத்தமாக நிதிக் கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக் கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கள்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பிரதான உள்ளக கட்டுப்பாடு மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட கட்டளைகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

1.5 ஏனைய சட்டரீதியான தேவைகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் பின்வரும் தேவைகள் தொடர்பாவிசேட விதிமுறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் நகர சபையின் நிதிக்கூற்றுகள் முன்னைய ஆண்டுடன் ஏற்புடையதாகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

1.6 நிதிககூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 உள்ளுராட்சி மன்ற நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

	உரிய நியமங்களுடனான தொடர்புடன் இணங்காமை	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.28 ஆம் பந்தியின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகளிலாலான காசுப் பாய்ச்சல் கணிப்பீட்டின் போது விரிவான வருமானக் கூற்றின் மிகை ரூபா 5,741,146 இற்குப் பதிலாக ரூபா 9,880,437 என ரூபா 4,139,291 கூடுதலாகவும் மீளாய்வாண்டில் பெறுமானதேய்மானச பெறுமதி ரூபா 19, 134,640 ஆக இருந்த போதிலும் அது ரூபா 14,586,519 என ரூபா .4,548,121 தொகை குறைத்தும் தொழிற்படு மூலதனம் சீராக்கத்தின் போது இறுதி இருப்பின் பெறுமதி ரூபா 131,601 ஆக இருந்த போதும் அது ரூபா 7,551,410 என ரூபா 7,419,809 கூடுதலாக சீராக்கப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டில் விரிவான வருமானக் கூற்றிற்கு இணக்கம் செய்யப்பட்ட முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 5,581,172 மிகையிலிருந்து கழித்தக் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. .	திருத்தம் செய்வதாக	நியமத்திற்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும்.

(ஆ)	நியமத்தின் 3 ஆம் அத்தியாயத்தின் 3.29 ஆம் பந்தியின் படி முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்களை கணிப்பீடு செய்யும் போது, மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுக்களுக்குரிய 15 ஆம் இலக்க குறிப்பின் பிரகாரம் மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உள்ளவாறு நிலையான வைப்பு வட்டியுடன் நிலையான வைப்பு பெறுமதி ரூபா 36,808,404 ஆல் அதிகரித்திருந்த காசுப் பாய்ச்சல் கூற்றில் வட்டி பெறுவனவு அல்லது மீள் முதலீடுகள், மதலீட்டு செயற்பாடுகளில் உருவான காசுபாய்ச்சலின் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.	திருத்திய காசுப் பாய்ச்சல் கூற்றின் மூலம் சீராக்கப்பட்டு ள்ளதாக	நியமத்திற்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும்.
(இ)	நியமத்தின் 9 ஆம் அத்தியாயம் மற்றும் அதன் 2 அத்தியாயத்தின் பிரகாரம் மீண்டெழும் செலவினமல்லாத செலவினங்களுக்காக அரசாங்கத்திடமிருந்து மாற்றல்களைக் கணக்கிடுவதில், நியமத்தின் 9.5 இன் பிரகாரம் தேய்மானம் கணக்கிடப்பட்ட அதே முறையில் செலவுகள் இனங்காணப்படும் காலப்பகுதியில் வருமானம் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிரும், ஆனால் அது அதன் பிரகாரம் இனங் காணப்பட்டிருக்கவில்லை.	திருத்திய காசுப் பாய்ச்சல் கூற்றின் மூலம் சீராக்கப்பட்டு ள்ளதாக	நியமத்திற்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும்.
(ஈ)	ஆண்டுக்கான காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு மற்றும் அதற்கு சமமானவற்றின் கீழ் ரூபா 12,829,068 ஆக இருக்க வேண்டிய போதிலும் அது ரூபா. 21,898,691 என ரூ. 9,069,623 அதிகமாக காண்பிக்கட்டப்பட்டிருந்ததது.	திருத்திய காசுப் பாய்ச்சல் கூற்றின் மூலம் சீராக்கப்பட்டு ள்ளதாக	நியமத்திற்கு இணங்க காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேண்டும்.

1.6.2 **கணக்கீட்டு குறைபாடுகள்**

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டிற்கான வட்டி வருமானம் ரூபா 4,916,097 ஆக இருந்த போதிலும், அது ரூபா 6,121,572 என ரூபா 1,205,475 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	திருத்திய விரிவான வருமானக் கூற்றின் மூலம் சீராக்கப்பட்டுள்ள தாக.	சரியான பெறுமதி இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் இறுதி திகதியில் உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் திரண்ட நிதியத்தின் மீதிக்கும் பேரேட்டின் படி மீதிக்கும் இடையே ரூபா 18,301,361 ஆன வித்தியாசம் இருந்தது.	திருத்திய உரிமை மாற்றங்கள் கூற்றின் மூலம் சீராக்கப்பட்டுள்ளத াক.	கணக்கீடு செய்தல் சரியாக செய்யப்பட வேண்டும்.
(இ)	பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டி வருமானம் ரூபா 1,423,240 ஆக இருந்த போதிலும், அது ரூபா 2,629,215 என ரூபா 1,205,475 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது,	சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் மூலம் சீராக்கப்பட்டுள்ளத ாக.	பெறுமதி சரியாக இனங் காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும்..

(ஈ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி இல் உள்ளவாறு,வங்கி இணக்கக் கூற்றில் காணப்பட்ட வங்கிக்கு நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 2,725,113 ஆன காசு வைப்பு ரூபா 4,548,993 ஆன சம்பள மீள்நிரப்பல், ரூபா 107,129 நிலையான வைப்பு வட்டி, ரூபா 123,351 ஆன சூரிய மின் உற்பத்தி வருமானம் மற்றும் ரூபா 4,594,710 ஆன முத்திரை வரி என மொத்தம் ரூபா 12,099,296 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டில் வருமானக் கணக்கில் உள்ளடக்கு வதாக.	கணக்கீடு செய்தல் சரியாக செய்யப்பட வேண்டும்.
(உ)	மீளாய்வாண்டில் வழங்கப்பட்ட சேவைகள் வழங்கலின் பெறுமதி ரூபா 6,679,550 ஆன சுரிய பெனல் முறைமை சொத்துக்களின் கீழ் இனங்காணாமல் நடைமுறை வேலைகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்ததுடன திசெம்பர் மாத பணத்திலிருந்து கிடைத்த பெறுமதி ரூபா 123,351 மதிப்பு மற்றும் அலுவலக பட்டியலுக்கு எதிராக ஈடுசெய்யப்பட்ட அலகுகளின் எண்ணிக்கைக்குரிய பெறுமதி வருமானமாக அங்கீகரிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆம் ஆண்டில் ஒரு சொத்தாகக் கணக்கிடப் பட்டு வருமானமாக எடுத்துக் கொள்ளப்பட்டதாக.	கணக்கீடு செய்தல் சரியாக செய்யப்பட வேண்டும்.

1.6.3 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் நிதிக் கூற்றுகளில் உள்ளடக்கப்பட்ட 05 கணக்கு மீதிகளின் நிதிக் கூற்றுக்களின் கூட்டுப்பெறுமதி மற்றும் ஆவணங்களின் பிரகாரம் கூட்டுபெறுமதிக்கு இடையே ரூபா 69,431,063 ஆன இணக்கமின்மை காணப்பட்டது.	அட்டவணைகள் சரியானதல்ல என்பதாக	அட்டவணைகள் புதுப்பிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் நிதிக் கூற்றுக்கள் சரிசெய்யப்பட வேண்டும்.

1.6.4 தொங்கல் கணக்குகள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் தேறிய சொத்துக்கள் ரூபா 1,570,007,868 ஆகவும், தேறிய சொத்துக்கள்/உரிமை மூலதன மாற்றங்கள் கூற்றில் ரூபா 1,496,425,357 ஆகவும் காண்பிக்கப்பட்டதால் சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் கூற்றில் ரூபா 73,582,511 ஆன தொங்கல் மீதியொன்றாக இருந்தது.	திருத்தம் செய்து சமர்ப்பிப்பதாக.	கணக்கீடு செய்தல் சரியாக செய்யப்பட வேண்டும்.

1.6.5 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகளின்மை

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
விரிவான அட்டவணைகள் சமர்ப்பிக்கத் தவறியதால் ரூபா 107,058,687 மீதியான குறிப்பு 10 மூலதன செலவின படிகள் திருப்திகரமான மெய்மையாய்வை செய்ய முடியாதிருந்தது.	திருத்தம் செய்து சமர்ப்பிப்பதாக.	ஆட்டவணைகளை சரியாக சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும

1.7 இணங்காமைகள்

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழெ காட்டப்பட்டுள்ளன. .

	சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு	இணக்கமின்மைகள	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நகர சபையின் நிதி நிர்வாகம் தொடர்பான கணக்கு விடயங்கள் குறித்த விதிகள்.			
	(i) 312(V)	சபையின் உடற் பயிற்சி நிலையத்திற்கான கேள்வி கோரலின் போது, செய்தித்தாள் விளம்பரங்களில் உடற் பயிற்சி நிலையம் உபகரணங்கள் பொருத்தப்பட்டா அல்லது இல்லையா பொருத்தப்பட்டுள்ளதா இல்லையா என்பது குறிப்பிடப்படாமையால் அது தொடர்பில் ஆர்வமுள்ள தரப்பினரால் அது பற்றிய அனைத்து தகவல்களையும் அறிய முடியவில்லை. அதனால், சரியான திட்டமிடல் இல்லாமல் கேள்வி விளம்பரங்களை வெளியிட்டு மீண்டும் கேள்வி விளம்பரங்களை வெளியிட வேண்டியிருந்தது.	இரண்டாவது முறையாக கேள்விகள் சரியாக அழைக் கப்பட்டதாக.	கணக்கீட்டு நடவடிக்கைகள் தொடர்பான விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
	(ii) 395	சொத்துக்கள் தொடர்பான மதிப்பீட்டு அறிக்கையை ஒரு பட்டய மதிப்பீட்டாளரிடமிருந்து பெறாமல், 21 சொத்துக்களுக்கான கேள்வி பெறுமதியை சபையால் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.	ஒரு பட்டய மதிப்பீட்டாளரிட மிருந்து மதிப்பீட்டைப் பெற்றுக் கொள்ள கடிதம் ஒன்று சமர்ப்பிக்கப்பட் டுள்ளதாக .	சொத்துக்களுக்கா ன ஒரு பட்டய மதிப்பீட்டாளரிடமி ருந்து மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் கேள்வி பெறுமதிகள் தீர்மானிக்கப்பட வேண்டும்

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 5,741,146 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,239,491 ஆக இருந்தது.

2.2 நிதிக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பற்றுச்சீற்றொன்று வழங்காமல் காசேட்டில் பதிவு செய்தமை காரணமாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முத்திரை கட்டண பெறுவனவுகள் ரூபா 4,594,710 தொகை பயன்படுத்தாமல் அல்லது முதலீடு செய்யாமல் விளைவற்று பேணி செல்லப்பட்டிருந்தது.	எதிர்காலத்தில் அவ்வாறான தவறு விட்டுவிடல்கள் இடம்பெறாமல் இருக்க நடவடிக்கை எடுப்பதாக	விளைவற்று காணப்படும் காலப்பகுதிக்குரிய சபை நிதியத்திற்கான நட்டத்தை நிச்சயித்து அறவிடுவதற்கும் எதிர்காலத்தில் பயன்பாட்டுக்கு எடுப்பதற்கு அல்லது முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(ஆ)	சும்பள மீள் நிரப்பல் பணமாக வங்கிக்கு செலவு வைக்கப்பட்டந்திரந்தமை இனங்காணப்பட்ட போதும் காசேட்டிற்கு எடுக்கப்படாமல் நீண்ட காலமாக முன் கொண்டு வரப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது அதன் பிரகாரம் முதல் ரூபா 4.6 மில்லியன் முதல் 23.3 மில்லியன் வரை 2024 ஆம் ஆண்டு முழுவதும் முதலீடு செய்யாமல் விளைவற்று பேணி செல்லப்பட்டு இருந்தது.	வருமானத்திற்கு எடுத்து சரி செய்வதாக.	பொதுமக்கள் பணத்தை செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்த நடவடிக்கை எடுத்தல் வேண்டும். முதலீடு செய்வதற்கு.நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
(இ)	2019 ஆம் ஆண்டின் போது தீயினால் அழிந்த கடை உரிமையாளர்களால் வைப்புச் செய்யப்பட்டதாக அனுமானிக்கப்பட்ட போதும் வைப்பாளர்கள் நிச்சயமாக இனங்காணப்படாத வைப்புக்களின் பெறுமதி 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,725,113 ஆக இருந்தது. அப்பணத்தைப் பயன்படுத்துவதற்காக காசேட்டிற்கு எடுக்க முடியுமாக இருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமல் விளைவற்ற வகையில் பேணிச் செல்லப்பட்டு இருந்தது	அவ்வைப்புக்களை காசேட்டிற்கு எடுப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக.	விளைவற்று காணப்படும் காலப்பகுதிக்குரிய சபை நிதியத்திற்கான நட்டத்தை திட்டவட்டமாக அளவிடுவதற்கும் எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்கோ அல்லது முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்

(ஈ)	சபையின் நடைமுறை கணக்கில் ரூபா 60,000,000 இற்கு மேற்பட்ட தொகை 2024 ஆம் ஆண்டு பூராவும் விளைற்று காணப்பட்டன இப்பணத்தை நிலையான வைப்பு ஒன்றில் முதலீடு செய்து இருந்தால் ஆண்டிற்கு 11 சதவீத வட்டி அல்லது ரூபா 6,600,000 ஆன வருமானம் ஒன்று சபை நிதியம் இழந்திருந்தது.	காசேட்டில் உள்ள மீதியை நிலையான வைப்பில் இடுவதற்காக எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுப்பதாக	பொதுமக்கள் பணத்தை செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் பயன்படுத்தப்பட வேண்டும்.

2.3 வருமான நிர்வாகம்

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	வருமான மூலம்	2024 மதிப்பிடப் பட்ட வருமானம்	2024 பட்டியலிடப் பட்ட வருமானம்	2024 சேகரிக்கப்பட்ட வருமானம்	2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை	2023 மதிப்பிடப்ப ட்ட வருமானம்	2023 பட்டியலிடப் பட்ட வருமானம்	2023 சேகரிக்கப்ப ட்ட வருமானம்	2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை
		ரூபா 000'	ரூபா 000'	ரூபா 000'	ரூபா 000'	ரூபா 000'	ரூபா 000'	ரூபா 000'	ரூபா 000'
(i)	வீதவரியும் வரியும்	20,470	20,330	18,248	15,849	19,000	18,866	16,900	12,109
(ii)	வாடகை	33,615	23,220	38,248	5,244	67,006	22,417	21,298	3,072
(iii)	அனுமதிப் பத்திரக் கட்டணங் கள்	921	400	1,442	277	901	367	442	204
(iv)	ஏனைய வருமானம்	32,304	-	21,891	7,891	31,525	11,610	11,610	9,425
		87,310	43,950	79,829	29,261	118,432	53,260	50,250	24,810

2.3.2 வருமானம் சேகரிப்பின் செயலாற்றல்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(ஆ)	மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட மொத்த வருமானத்தில் பட்டியலிடல் சுமார் 50 சதவீதமாக இருந்தது, அதே நேரத்தில் சேகரிக்கப்பட்ட வருவாய் சுமார் 69 சதவீதமாக இருந்தது. எனவே, மொத்த வருவாயின் மதிப்பீடு யதார்த்தமானது என அவதானிக்கப்படவில்லை.	மதிப்பிடப்பட்ட வருமானம் ஒரு மதிப்பீட்டின் அடிப்படையிலும்பட் டியலிடப்பட்ட வருமானம் ஒரு கணிப்பின் அடிப்படையிலும் உள்ளதா	மொத்த வருமான மதிப்பீடு யதார்த்தமாக செய்யப்பட வேண்டும்.

(ஆ)	மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதி யில் உள்ளவாறு கால பகுப்பாய்வு அறிக்கையின்படி, ரூபா 15,710,560 ஆன மொத்த நிலுவை மீதியில் உள்ள 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட தொகை ரூபா 5,264,509 ஆகவும், 2 முதல் 3 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட நிலுவைத் தொகை ரூபா 3,825,940 ஆகவும், 01 ஆண்டுக்குள் நிலுவைத் தொகை ரூபா 6,620,111 ஆகவும் சகைக்கு அறவிடப்பட வேண்டியிருந்தது.	நிலுவையில் உள்ள ஆதன வரி சொத்துக்கள் குறித்து ஒரு கணிப்பீடொன்று நடத்தப்பட்டு வருவதாக.	நிலுவையில் உள்ள வருவாயை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள செயற்பாடுகளை நிறைவேற்றுதல்

நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுது போக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
நகர சபையின் பாதீடு செய்யப்பட்ட கழிவுப் கட்டண அளவு ரூ. 2,300,000 ஆகவும், ஆண்டுக்கான உண்மையான சேகரிப்பு ரூபா 1,230,000 ஆகவும் இருந்ததால், சேகரிப்பு முன்னேற்றம் பாதீட்டுடன் ஒப்பிடும் போது சுமார் 53 சதவீதமாக இருந்தது. ஆண்டுதோறும் 233,801 கிலோகிராம் உக்கும் கழிவகளையும் 99,500 கிலோகிராம் உக்காத கழிவுகளையும் சேகரித்திருந்த போதிலும், அந்தக் குப்பை ஒரு வளமாகக் கருதப்படாமல் அப்புறப்படுத்தப்பட்டுள்ளது.	குப்பையிலிருந்து வருமானம் ஈட்டுவதை விட கழிவுப்பொருள் முகாமைத்துவத்திற்கு முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளதாக.	கழிவுகளை முறையாக அப்புறப்படுத்தவும், அதிலிருந்து கிடைக்கும் வருமானத்தை சபை நிதிக்கு பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.2 செயற்பாட்டு வினைத்திறனின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	புதிய பொது சந்தை தொகுதியின் மேல் தளத்தில் கட்டப்பட்ட கூட்ட மண்டபம், ஒரு பட்டய மதிப்பீட்டாளரால் மதிப்பீடு செய்யப்படாமல் ரூபா 30,000 வீதப் படி மதிப்பீட்டு மாத வாடகை வெளி நபருக்கு 03 ஆண்டுகளுக்கு 2023 நவம்பர் முதல் என்ற விகிதத்தில், வழங்கப்பட்டது. அதை மாத வாடகைக்கு .	மாதாந்தம் ரூ. 30,000 தொகைக்கு மதிப்பீட்டில் வாடகைக்கு வழங்க தீர்மானிப்பட்டதாக	மதிப்பீட்டை ஒரு பட்டய மதிப்பீட்டாளர் மதிப்பீடு செய்ய வேண்டும்.
(ஆ)	கேள்வி நிபந்தனைகளின் படி திருப்பிச் செலுத்தக்கூடிய பாதுகாப்பு வைப்புத் தொகையை ஒரே நேரத்தில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் உடற்பயிற்சி நிலையத்துடன்	முழு வாடகை பாதுகாப்புத் தொகையும் பெற்றுக்	கேள்வி நிபந்தனைகளின்

	தொடர்புடைய ரூபா 153,000 பாதுகாப்பு வைப்புத் தொகையில் ரூபா 75,000 தொகையை மாத்திரமே செலுத்தி மீதமுள்ள தொகையை தவணைகளில் கொடுப்பனவு செய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.	கொள்ளப்பட்டு ள்ளதாக.	பின்பற்ற வேண்டும்.
(இ)	சபை வருடாந்தம் கேள்வி மூலம் வழங்கப்படும் 21 சொத்துக்களில், 07 சொத்துக்கள் மீளாய்வு ஆண்டில் குத்தகைக்கு வழங்குவுதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	சபைக்குச் சொந்தமான 07 சொத்துக் களை குத்தகைக்கு வழங்க முடியவில்லை என்பதாக .	சுபையினால் வருடாந்தம் கேள்வி சொத்துக்களை குத்தகைக்கு விடுவதன் மூலம் வருமானத்தை ஈட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2023 செப்டம்பர் 21 ஆந் திகதி முதல் ஆண்டுக்கு 8.75 சதவீத வட்டி விகிதத்தில் மக்கள் வங்கியில் ரூபா 05 மில்லியன் நிலையான வைப்புத்தொகை முதிர்வு திகதி இல்லாமல், பராமரிக்கப்பட்டு வருகிறது. தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டபடி, அதிக நன்மைகளைத் தரும் வகையில் முதலீடு செய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. பொது நிதியை மிகவும் திறமையான முறையில் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.	கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் அதிக நன்மைகளை அளிக்கும் வகையில் முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக.	பொது நிதியை அதிகபட்ச செயற்திறனுடன் பயன்படுத்துவத ற்க ஈடுபடுத்த வேண்டும்.
(ஆ)	2021 ஆம் ஆண்டில், 3.75 ஆக இருந்த வட்டி விகிதத்தில் முதலீடு செய்திரந்த இருந்த ரூபா 05 மில்லியன் தொகையை 2023 செப்டம்பர் 07 ஆந் திகதி ஏழு நாள் வைப்பிற்கு மாற்ற தீர்மானிக்கப்பட்டிருந்து.	சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் அதிக நன்மைகளை பெற்றுக் கொள்ளும் வகையில் முதலீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாக.	பொது நிதியை அதிகபட்ச செயற்திறனுடன் பயன்படுத்துவத ற்க ஈடுபடுத்த வேண்டும்.

3.4 மனிதவள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவியணியின் பிரகாரம் 02 சிரேஷ்ட நிலை வெற்றிடங்களும் 11 ஆரம்ப நிலை வெற்றிடங்களும் 06 இரண்டாம் நிலை வெற்றிடங்களும் மொத்தம் 19 வெற்றிடங்கள் காணப்பட்டன.	இது தொடர்பாக தொடர்ந்தும் அறிவிக்கப்பட் டுள்ளதாக	பொது மக்களுக்கு உயர்ந்த பட்ச சேவையொன்றை வழங்குவதற்கு பதவியணினர் முகாமைத்துவும் செய்யப்பட வேண்டும்.

.35 ஒப்பந்த நிர்வாகத்திலான குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நகர அபிவிருத்தி அதிகாரசபையால் நிர்மாணிக்கப்பட்டு சபையிடம் ஒப்படைக்கப்பட்ட பேருந்து நிலையத்திற்கு எதிரே உள்ள புதிய வணிக வளாகத்தின் நிர்மாணத்தில் சபையின் குறைந்தபட்ச ஈடுபாடு குறித்தும், தேவைக்கேற்ப நிர்மாணம் மேற்கொள்ளப்படாமை குறித்தும் பின்வரும் விடயங்கள் வெளிப்படுத்தப்பட்டன.		
(i)	புதிய வியாபார வளாகத்தின் நிர்மாணப் பணிகள் பல கட்டங்களாக மேற்கொள்ளப்பட்டு, அது நிறைவடைவதற்கு முன்பே, கவுன்சில் கட்டுமானப் பணிகளை பகுதிகளாகக் கையேற்று, கடைகளை அறைகளை குத்தகையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் வெளித் தரப்பிரால் கட்டப்பட்ட இந்தக் கட்டிடம், அது கட்டி முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்படும் வரை இருக்பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்தது.	புதிய மதிப்பிடப்பட்ட மதிப்பீட்டின் அடிப்படையில் குத்தகைதயாளருடன் ஒப்பந்தம் செய்து கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளதாக	நிர்மாணப் பணிகள் முடிந்த பிறகு, சொத்து முறையாக சபையால் கையேற்கப்பட்டு வாடகைக்கு வழங்கப்பட வேண்டும்.
(ii)	நிர்மாணம் தொடர்பான ஆரம்ப கலந்துரையாடல்களில் சபையன் ஈடுபாடு இல்லாததால், கட்டிடம் சரியான திட்டத்தின் படி கட்டப்படாததால், மூன்றாவது மாடியில் உள்ள கடைகள் குத்தகைதாரர்களால் மூடப்பட்டிருந்தன. ஒவ்வொரு தளத்திற்கும் கடை உரிமையாளர்களுக்கு தேவையான பொதுவான வசதிகள் வழங்கப்படவில்லை, மேலும் நிர்மாணம் மற்றும் வடிவமைப்பில் உள்ள பலவீனங்கள் காரணமாக நீர் தாங்கிக்கு அருகிலுள்ள வர்த்தக தொகுதி வளாகத்தில் உள்ள கழிப்பறை குழிகள் தொடர்ந்து நிரம்பி வழிவதாக முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சபையின் ஆதனமொன்றில் நிர்மாணிக்கப்பட்ட கட்டிடத்தை உரிய தரத்திற்கு தயார்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கத் தவறியமை கணிக்காய்விற்கு சர்சைச்குரியாக இருந்தது.	திட்டத்தில் பொது வசதிகள் நிறுவப்படவில்லை என்பதாக	குத்தகைக்கு வழங்குவதற்கு முன்பு பொது வசதிகள் நிறுவப்பட வேண்டும்.
(ஆ)	மினுவாங்கொடை பிரதேச செயலகம் மூலம் பன்முகப்படுத்தப்பட்ட பாதீட்டு நிகழ்ச்சித் திட்டம் - 2024 இன் கீழ் ஒரு பல்நோக்கு கட்டிடத்தை நிர்மாணிக்க அங்கீகாரம் அளித்த செயற்திட்டம் 2024 ஏப்ரல் மாதம் வரை எதிர்வரும் நடவடிக்கைககள் மேற்கொள்ளாமல் காலம் முடிவடைந்த பின்னர் அவசர திட்டமொன்றாக கருதி மற்றும் திட்டத்தைத் தயாரிப்பதற்கான பெறுகை செயல்முறை மூலம் ஆலோசனை சேவைகளை நியமிக்காமல் நேரடியாக ஒரு வடிவமைப்பாளர் தெரிவு செய்யப்பட்டிருந்தார், பொருத்தமான திட்டத்தைத் தயாரித்து உடனடியாக சமர்ப்பிக்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்த	நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட MF/02/20 இன் கீழ் 2024 திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்டங்கள்	பெறுகை முறையின் படி ஒரு ஆலோசகரைத் தேர்ந்தெடுத்து, திட்டங்களை மேற்கொள்ள அந்த நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்யப்பட்டு

போதும், சபையால் வேலையை முடித்து ஒப்படைக்க வேண்டிய திகதி, சேவை நிபந்தனைகள் போன்ற தகவல்களை உள்ளடக்கி ஆலோசகருடன் முறையான ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கவில்லை.	2024 ஜூலை 31 ஆந் திகதிக்கு இற்கு முன்னர் முடிக்கப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட் டிருந்ததாக	செயற்திட்டம் நிறைவேற்றப்ப ட வேண்டும்.

4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

4.1 நிதி கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2019 திசெம்பர் 24 ஆம் திகதிய 2155/7 ஆம் இலக்க வெளியிடப்பட்ட அசாதாரண வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட நகர சபை நிதி நிர்வாகம் தொடர்பான கணக்கீட்டு விடயங்கள் தொடர்பான விதி 8 இன் பிரகாரம் கடந்த ஆண்டின் கணக்குகள் அடுத்த நிதியாண்டின் பெப்ரவரி 28 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாயவ்ாண்டின் நிதிக் கூற்றுக்கள் 69 நாட்கள் தாமதத்தின் பின்னர் 2025 மே 08 ஆந் திகதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.	புதில் அளிக்கப் பட்டிருக்கவில்லை.	விதிகளின் பிரகாரம் உரிய திகதியில் கணக்குகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்